பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 09 2024 **SATURDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் முதல் இரண்டு கட்ட சட்டப்பேரவை தேர்தல் அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தைச் சேர்ந்த இயற்கை விவசாயி பாப்பம்மாள் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

3. ஜம்மு காஷ்மீரில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றால் மாநில அந்தஸ்து மீட்கப்படும் என்று அக்கட்சி கூறியுள்ளது.

4. ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்க பிரிட்டன் ஆதரவு அளிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் திரு. **Keir Starmer** தெரிவித்துள்ளார்.

5. ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், கோவா அணி, 3-2 என்ற கோல்கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் முதல் இரண்டு கட்ட சட்டப்பேரவை தேர்தல் அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது வரலாற்றுச்

சிறப்புமிக்கது என்று பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வன்முறைச் சம்பவங்கள், தீவிரவாத தாக்குதல்கள் ஏதுமின்றி வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றிருப்பது ஆரோக்கியமான அரசியல் பாதைக்கு அந்த யூனியன் பிரதேசம் திரும்புவதை காட்டுவதாக கூறியுள்ளார்.

துப்பாக்கி தோட்டாக்களை நிராகரித்து, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து, ஏராளமான மக்கள் தேர்தலில் பங்கேற்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்தில் நாட்டம் கொண்டிருந்த பல இளைஞர்களும், அதனை கைவிட்டுவிட்டு, தேசிய நீரோட்டத்தில் இணைந்திருப்பது ஜம்மு காஷ்மீரின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

இளைஞர்கள் பலர் தீவிரவாதத்தை நிராகரித்ததை பாராட்டிய திரு. நட்டா, இது ஜம்மு காஷ்மீரின் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான வெற்றி என்று குறிப்பிட்டார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு நீக்கப்படுவதற்கு முன்பு ஆண்டுக்கு 300 முதல் 400

இளைஞர்கள் தீவிரவாத இயக்கங்களில் இணைந்து வந்தனர் என்றும் தற்போது அந்த எண்ணிக்கை நான்காக குறைந்து விட்டது என்றும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>><<<<

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் 67 கோடி பேர் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த காப்பீட்டுத் திட்டத்தில், 42 கோடிக்கும் அதிகமான சுகாதார ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், நாடுமுழுவதும் 17 ஆயிரத்திற்கும் அதிகமான மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆயுஷ்மான் சுகாதார காப்பீட்டு திட்டத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு, பயனாளிகளுக்கு விரைவான, தரமான, வெளிப்படையான சுகாதார வசதி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>><<<<

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி மூன்றாவது முறையாக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியமைக்கும் என்றும் பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று அம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவதற்கான தொகை 10 லட்சம் ரூபாயாக மத்திய அரசு உயர்த்தவுள்ளது என்று கூறினார்.

இதனால், ஏராளமான எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயனடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், ஒவ்வொரு விவசாயிக்கும் ஆண்டுக்கு 3 தவணைகளில் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களால் ஹரியானா மாநிலத்தில் பிஜேபி மீண்டும் வெற்றி பெறும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றால் மாநில அந்தஸ்து மீட்கப்படும் என்று அக்கட்சி கூறியுள்ளது.

நேற்று அம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. பரத்சிங் சோலங்கி, மத்திய அரசு ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநருக்கு அதிக அதிகாரங்களை வழங்கிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

ஜம்மு காஷ்மீரில் ஜனநாயகத்தை மீட்டெடுப்பது அவசியம் என்றும் விலைவாசி உயர்வு, வேலையின்மை ஆகியவை தேர்தலில் முக்கிய பிரச்சினையாக உள்ளது என்றும் திரு. பரத்சிங் சோலங்கி, கூறினார்.

>>>><<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தெலங்கானாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

ஹைதராபாதில் உள்ள சட்டப்பல்கலைக் கழக 21வது பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார்.

பின்னர், செகந்திராபாதில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் பாரதிய கலைத்திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.

எட்டு நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில் இந்தியாவின் கலாச்சாரம், கைவினை திறன்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கும், வடகிழக்கு மாநிலங்களின் உணவுத்திருவிழாவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிஸோரம், நாகாலாந்து, சிக்கிம் மற்றும் திரிபுரா மாநிலங்களிலிருந்து ஏராளமான கலைஞர்கள் இந்த விழாவில் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகேயுள்ள தேக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பாப்பம்மாள் என்ற மூதாட்டி நேற்றிரவு காலமானார்.

அவருக்கு வயது 110.

சிறுவயதில் பெற்றோரை இழந்த அவர், இயற்கை விவசாயத்தின் மீது ஆர்வம் கொண்டு அதில் ஈடுபட தொடங்கினார்.

அவரது ஆர்வத்தை பாராட்டும் வகையில், கடந்த 2021ஆம் ஆண்டு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.

பாப்பம்மாள் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது மறைவு மிகுந்த வேதனையளிப்பதாக சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இயற்கை விவசாயத்தில் முத்திரை பதித்தவர் அவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

1970ஆம் ஆண்டு தொடங்கி, 45 ஆண்டுகாலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உழவர் விவாதக்குழு உறுப்பினராக செயல்பட்டவர் மறைந்த பாப்பம்மாள் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை, பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

பண்டிகை காலம் தொடங்குவதை முன்னிட்டு, நாடுமுழுவதும் ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்கவுள்ளது.

துர்கா பூஜை, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளுக்காக பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்று வரும் வகையில், வரும்

செவ்வாய்க்கிழமை முதல் நவம்பர் மாதம் 30ஆம் தேதிவரை சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

பண்டிகை காலத்தில் லட்சக்கணக்கான பயணிகள் ரயில்களில் பயணம் செய்யும் போது, நெரிசலை தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 429 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு அதைவிட கூடுதலாக ரயில்கள் இயக்கப்படும் என்றும் ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாம்சங் நிறுவன தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தத்தை முடித்துக் கொண்டு பணிக்கு திரும்ப வேண்டும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டிஆர்.பி. ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழிற்சங்க பிரதிநிதிகளுடன், மாநில அரசும், சாம்சங் நிறுவனமும் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக கூறினார்.

முன்னதாக, சாம்சங் நிறுவன தொழிலாளர்களை சந்தித்துப் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை, தொழிலாளர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண, மாநில அரசு உடனடியாக பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்க பிரிட்டன் ஆதரவு அளிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் திரு. **Keir Starmer** தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில், ஐ.நா பொதுச்சபையின் 79வது அமர்வில் நேற்று உரையாற்றிய அவர், தற்போதைய சர்வதேச சூழ்நிலைகளுக்கு ஏற்ப, ஐநா பொதுச்சபையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்று கூறினார்.

ஐநா பாதுகாப்பு சபையில் ஆப்பிரிக்கா, பிரேஸில், ஜப்பான், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே உள்ள உறுப்பு நாடுகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. **Keir Starmer** வலியுறுத்தினார்.

ஐநா பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பூட்டானும் ஆதரித்துள்ளது.

நேற்று ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றிய பூட்டான் பிரதமர் திரு. **Tshering Tobgai,** பொருளாதார ரீதியாகவும் வலுவான நாடாக இந்தியா திகழ்வதாகவும் உலகின் தெற்குப்பகுதிகளில் உள்ள நாடுகளின் தலைமை நாடாக இந்தியா விளங்குவதாகவும் தெரிவித்தார்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் **Reasi** மற்றும் ரஜோரி மாவட்டத்தில் யாத்திரிகர்கள்மீது நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வு முகமை நேற்று பல்வேறு இடங்களில் திடீர் சோதனை நடத்தியது.

ஏழு இடங்களில் இந்த சோதனை நடைபெற்றதாகவும், தலைமறைவு தீவிரவாதிகள் என்று கருதப்படும் சிலரது வீடுகளை ஒட்டிய காட்டுப்பகுதியிலும் இந்த சோதனை நடைபெற்றதாக தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு உணவு மற்றும் புகலிடம் அளிக்கப்பட்ட இடங்களிலும் சோதனை நடைபெற்றது.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி, 3-2 என்ற கோல்கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு - மோகன் பஹான் அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<<

**Macau** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை இன்று தைவான் இணையான **Hsieh Pei – Hung En** இணையை எதிர்கொள்கிறது.

>>>><<<<

மன்னார்குடியை அடுத்த வடுவூரில் மாநில அளவிலான ஆடவர் - மகளிர் வலுதூக்கும் போட்டி நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும்இப்போட்டியில் 360க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

>>>>END<<<<